BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:20 **தேதி:-01.09.2017**

மத்திய சங்கத்தின் இணைய தளத்தில் இருந்து சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை கடுமையாக குறைந்துள்ளதை மோடி அரசாங்கம் பெரிய அளவில் பயன்படுத்தி லாபமடைந்து வருகிறது. மூன்றாண்டுகளுக்கு முன் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றிற்கு 100 அமெரிக்க டாலர்களாக இருந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக அதன் விலை கடுமையாக குறைந்து 50 டாலர் என்ற அளவிலேயே இருந்து வருகிறது. உதாரணமாக டிசம்பர் 2016ல் 54.10 டாலர்களாகவும், ஜூலை 2017ல் 50.41டாலர்களாகவும், 18.08.2017ல் 50.93 டாலர்களாகவுமே இருந்துள்ளது. சர்வதேச சந்தையிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்களை மோடி அரசாங்கம் மிச்சம் பிடித்துள்ளது. எனினும் நமது நாட்டில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் தொடர்ந்து உயர்வதன் மூலம் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் பெட்ரோல் லிட்டருக்கு 6.02ரூபாயும், டீசல் லிட்டர் ஒன்றிற்கு 3.89 ரூபாயும் உயர்ந்துள்ளது. 30.08.2017 அன்றைய நிலவரப்படி சென்னையில் பெட்ரோல் லிட்டர் 71.62 ரூபாய் என்றும் டீசல் 60.02 ரூபாய் என்றும் விற்கப்பட்டது. மக்களை கொள்ளையடிக்க 'தினசரி விலை நிர்ணயம்' என்கிற புதிய முறையினை மோடி அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய முறை மூலம் பெட்ரோல் மற்றும் டீசல் விலை எவ்வாறு மாறுகிறது என்பதை மக்களால் உணர முடியவில்லை. பெட்ரோலிய பொருட்களின் தொடர் விலையேற்றம் அனைத்து பொருட்களின் விலையேற்றத்துடன் முடிவதால் சாதாரண மக்களின் துயரம் அதிகரிக்கிறது. விலைவாசியை கட்டுப்படுத்துவேன் என்று சொன்ன மோடி அரசாங்கத்தின் உறுதி மொழி எங்கே போனது?

இறுதிக் கட்டத்தில் நிலக்கரி நிறுவன ஊழியர்களின் ஊதிய மாற்றம்:- நிலக்கரி நிறுவன ஊழியர்களின் ஊதிய மாற்றம் தொடர்பாக நாம் நமது சுற்றறிக்கை எண் 17ல் தெரிவித்திருந்தோம். 20 சதவிகித ஊதிய நிர்ணய பலன்களுடன் கூடிய ஐந்தாண்டு கால ஊதிய மாற்றத்திற்கான உடன்பாடு 31.08.2017க்கு முன் நிலக்கரி நிறுவனத்தில் ஏற்படும் என பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலைகளை விட சிறிய அறையில் பெரும்பாலான இந்தியர்கள்:- அரசாங்கத்தின் தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு (NSSO) சேகரித்துள்ள புள்ளிவிவரங்களின் படி, கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்திய மக்களின் பெரும்பான்மையானோர், சிறைச்சாலைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவை விட குறைவான இடத்திலேயே வசித்து வருகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. கிராமப்புற மக்களில் 80% மற்றும் நகர்புற மக்களில் 60% பேர் சிறைச்சாலைகளை விட சிறிய அறைகளிலேயே வசித்து வருகின்றனர் என அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

அந்தரங்க உரிமை அடிப்படை உரிமை என உச்சநீதிமன்றம்:- ஒரு குடிமகனின் அந்தரங்கம் (PRIVACY) அரசியல் சாசனத்தில் வடிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை என உச்சநீதிமன்றம் 24.08.2017 அன்று தீர்ப்பளித்துள்ளது. அந்தரங்க உரிமை அடிப்படை உரிமை இல்லை என இதே நீதிமன்றம் 1954 மற்றும் 1961ல் ஆண்டுகளில் கொடுத்திருந்த தீர்ப்பை 9 நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு தற்போது தவறு என தீர்ப்பளித்துள்ளது. ஜனநாயக சக்திகள் இந்த தீர்ப்பை வரவேற்றுள்ளன. அந்தரங்க உரிமை ஒரு சில தனி நபர்கள் சம்பந்தப்பட்டது என மத்திய மோடி அரசாங்கத்தின் அட்டர்னி ஜெனரல் வாதிட்டார். இந்த தீர்ப்பு மத்திய அரசாங்கத்திற்கு கடுமையான பின்னடைவு என கருதப்படுகிறது.

ஆதார் விவரங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு:- சமீபத்தில் 'அந்தரங்கம்' (PRIVACY) ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை என வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதி மன்றம் வழங்கியுள்ளது. ஆனால் அந்த உரிமையை அரசாங்கம் செயல்பாட்டில் மீறியுள்ளது. ஆதார் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒவ்வொரு குடிமகனின் பிறந்த தேதி, முகவரி, மொபைல் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி, கைரேகைகள், கருவிழி அடையாளங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தரப்பட்டுள்ளன. L-1 IDENTITY SOLUTIONS OPERATING CO PVT. LTD., என்பது அத்தகையதொரு நிறுவனம். அந்தரங்க உரிமை அடிப்படை உரிமை என உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தவர்களில் ஒருவரான பெங்களூருவை சார்ந்த கர்னல் மேத்யூ தாமஸ் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த விவரங்களை பெற்றுள்ளார். ஆதார் விவரங்கள் அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்படும் என்கிற அரசின் உறுதி மொழிக்கு மாறாக இந்திய குடிமகனின் அனைத்து தனிப்பட்ட விவரங்களையும் இன்று வெளிநாட்டு நிறுவனங்கள் கைக்கு சென்றுள்ளன. இவர்கள் இதனை எப்போது வேண்டுமென்றாலும் தவறாக பயன்படுத்தலாம். இந்த விவரங்கள் தில்லு முல்லுக்கு பெயர் போன அமெரிக்காவின் CIAவிற்கு சென்றுள்ளதாக WIKILEAKS தெரிவித்துள்ளது. இது போன்ற தகவல்களின் மூலம் பல நாட்டு அரசாங்கங்களை கடந்த காலங்களில் CIA கவிழ்த்துள்ளதும் நம் அனைவருக்கும் தெரியும்.

செல்லா நோட்டுக்களில் 99% வங்கிக்கு வந்து விட்டன:- செல்லாக்காசாக அறிவிக்கப்பட்ட 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களில் 99% வங்கிகளுக்கு திரும்ப வந்து விட்டதாக ரிசர்வ் வங்கியின் 2016-17ஆம் ஆண்டிற்கான அறிக்கை தெரிவிக்கிறது. மொத்தமிருந்த 15.44 லட்சம் கோடி ரூபாய்களில் வெறும் 16,000 கோடி ரூபாய்கள் மட்டுமே வங்கிகளுக்கு வரவில்லையாம். 2016 நவம்பர் 8ஆம் தேதி பண மதிப்பின்மை அறிவிக்கப்பட்ட நாள் முதலாய் கருப்புப் பணக்காரர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய அடி என ஆட்சியாளர்கள் கூறி வந்தனர். ஆனால் மதிப்பிழக்க செய்த பணத்தின் 99% திரும்ப வந்துள்ளது என்பது கருப்பு பணத்தை கண்டுபிடிப்பதில் தோல்வி அடைந்துள்ளதையே காட்டுகிறது. ஆனால் தனது சுதந்திர தின உரையில் பாரதபிரதமர் மோடி அவர்கள் பண மதிப்பின்மை காரணமாக 3லட்சம் கோடி ரூபாய் கருப்பு பணம் பிடிபட்டதாக தெரிவித்தார். அவர் எங்கிருந்து இந்த தகவலை பெற்றார் என்பது யாருக்கும் தெரியாது. பண மதிப்பின்மை ஏற்படுத்திய சிரமங்கள் காரணமாக 104 உயிர்கள் பலியானது தான் மிச்சம். பண மதிப்பின்மை விஷயத்தில் இந்தியாவின் பெருமை மிகு நிறுவனமான ரிசர்வ் வங்கி கோமாளியாக மாறியதுதான் வேதனை.

பாதுகாப்புத் துறை ஊழியர்களுக்கு இந்திய தயாரிப்பு தொலைபேசிகள் மட்டுமே!:- தொலை தொடர்பு துறையில் தனியார் மற்றும் அந்நிய கம்பெனிகளின் நுழைவை நாம் கடுமையாக எதிர்த்து வந்தோம். தனியார் மற்றும் அந்நிய நிறுவனங்களின் நுழைவு

நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் தெரிவித்து வந்தோம். BSNL ஊழியர் சங்கம் ஆரம்பித்த நாள் முதலாய் அந்நிய நேரடி முதலீட்டை நாம் கடுமையாக எதிர்த்து வந்தோம். (ஒரு சிலர் அந்நிய நேரடி முதலீட்டின் பலனை BSNLம் அனுபவிக்க வேண்டும் என்று கூறியது நினைவுக்கு வருகிறது). ஆனால் கடந்த காங்கிரஸ் மற்றும் பாஜக அரசாங்கங்கள் அதனை சட்டை செய்யவில்லை. தற்போது நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதை அரசாங்கம் உணர்ந்து, பாதுகாப்புத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு இந்திய மொபைல் தொலைபேசிகளை பயன்படுத்துவதை கட்டாயமாக்குவதோடு பாதுகாக்கப்பட்ட மின்னஞ்சல் சேவை வழங்குவது தொடர்பாகவும் பரிசீலிக்க எண்ணியுள்ளது.

ஹட்சிசன் நிறுவனம் 32,000 கோடி ரூபாய் கட்டவேண்டும்:- ஹட்சிசன் நிறுவனம் தனது பங்குகளை வோடோபோன் நிறுவனத்திற்கு விற்றதால் கிடைத்த மூலதன பலன்களுக்கான வரியாக வோடோபோன் நிறுவனம் 7,900 கோடி ரூபாய்களை கட்ட வேண்டும் என வருமான வரித்துறை 2007ஆம் ஆண்டு கூறியது நம் அனைவருக்கும் தெரியும். ஹட்சிசன் நிறுவனத்திற்கு பணம் கொடுக்கும் போது வோடோபோன் நிறுவனம் இந்த வரியினை பிடித்து கொடுத்திருக்க வேண்டும் என வருமான வரித்துறை கூறியிருந்தது. ஆனால் இதுவரை அந்த பணத்தை தராததோடு, இந்திய அரசாங்கத்தை சர்வதேச தீர்ப்பாயத்திற்கு வோடோபோன் நிறுவனம் இழுத்து சென்றது. தற்போது அந்த தொகை 32,000 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. இந்த சூழ்நிலையில் ஹாங்காங் நாட்டு நிறுவனமான ஹட்சிசன் நிறுவனம் 32,000 கோடி ரூபாய் தரவேண்டும் என இந்திய அரசாங்கம் கூறியுள்ளது. இந்த பணம் வருமா?

அரசியல் பலன்களுக்காக கும்பல்களிடம் சரண்டைந்த ஹரியானா அரசாங்கம்:- பெண்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களுக்காக தேரா சச்சா சௌதா வின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங் தண்டிக்கப்பட்டதை தொடர்ந்து நடைபெற்ற வன்முறை காரணமாக 36 பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஓட்டு வங்கி அரசியலுக்காக இந்த வன்முறையை ஹரியானா மாநில மனோகர்லால் கத்தார் அரசாங்கம் அனுமதித்துள்ளதாக பஞ்சாப் மற்றும் ஹரியானாவின் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. சமூக விரோத நபர்களாலேயே இந்த வன்முறை நிகழ்த்தப்பட்டதாகவும், தேரா சச்சா சௌதாவிற்கும் இதற்கும் தொடர்பில்லை என்கிற மனோகர்லால் கத்தாரின் அறிக்கையினை அந்த நீதிமன்றம் கண்டித்துள்ளது. பஞ்ச்கூலாவில் DSS ஆதரவாளர்களை பெருமளவில் குழுமி பொது சொத்துக்களை சூறையாட ஹரியானா அரசாங்கம் அனுமதித்துள்ளதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது. மனோகர்லால் கத்தார் அரசாங்கத்தை நீதிமன்றம் கண்டித்துள்ள சூழலில் பாஜக தலைமை அவர் நல்லவர் என்று சான்றிதழ் அளித்துள்ளது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்